




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








திங்கள் ❖ மே. 15, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 220 ❖ ரூ.10


## மரக்காணம் அருகே கள்ளச்சாராயம் குடித்த 4 பேர்

# உயிரிழப்பு

## மேலும் பலர் மருத்துவமனையில் அனுமதி அமைச்சர்கள் உத்தரவாதம்
## 4 காவலர்கள் பணியிடை நீக்கம், ஒருவர் கைது

**புதுச்சேரி , மே.15-**
**மரக்காணம் அருகே கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு அமைச்சர்கள் பொன்முடி மற்றும் செஞ்சி மஸ்தான் ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.**

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே உள்ள எக்கியார் குப்பத்தில் கள்ளச்சாராயம் அருந்திய சம்பவத்தில் 27 பேர் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சுரேஷ், சங்கர், தரணிவேல், ராஜமூர்த்தி ஆகிய 4 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். மீதமுள்ளவர்கள் முண்டியம்பாக்கம், மரக்காணம், புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் ஜிப்மர் மற்றும் பிம்ஸ் மருத்துவமனையில் வைக்கப்பட்ட சுரேஷ், சங்கர், தரணிவேல் ஆகிய மூன்று பேரின் உடல்களுக்கு அமைச்சர்கள் பொன்முடி, செஞ்சி மஸ்தான் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். மேலும், வடக்கு மண்டல ஐ.ஜி கண்ணன், மாவட்ட ஆட்சியர் பழனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் புதுச்சேரி மாநில சட்டப்பேரவை எதிர்கட்சி தலைவர் சிவா உள்ளிட்டோரும் இறந்தவர்களின் உடல்களுக்கு அஞ்சலி செலுத்தினர். அதோடு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கும், அவர்களது உறவினர்களுக்கும் ஆறுதல் கூறினர்.

பின்னர் அமைச்சர்





பொன்முடி செய்தியாளர்களிடம் கூறியதாவது : ''எக்கியார்குப்பத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது வருத்தத்தை தெரிவித்திருக்கிறார். அதோடு இறந்தவர்கள் குடும்பங்களுக்கு தாலா ரூ.10 லட்சம் நிதியுதவி அளிக்க உத்தரவிட்டிருக்கிறார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளவர்களுக்கும் ரூ.50 ஆயிரம் நிதியுதவி வழங்க உத்தரவிட்டுள்ளார். என்னதான் முதல்வர் நிதியுதவி அளித்தாலும், இது உண்மையில் பரிதாபத்துக்குரிய செய்திதான் என்பதை யாரும் மறுக்க முடியாது. கள்ளச்சாராயம், குட்கா, கஞ்சா போன்ற போதைப் பொருட்களை தடை செய்ய வேண்டும், இதில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதற்காக காவல்துறையினரின் மாநாட்டை நடத்தி போதைப்பொருள் தடுப்பு அமலாக்க பிரிவு ஒன்றையும் முதல்வர் உருவாக்கிக் கொடுத்தார்.

அதனடிப்படையில் எவ்வளவோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தடுக்கப்பட்டுள்ளன. இரண்டு நாட்களுக்கு முன்பு மதுரை பகுதியில் 2,200 கிலோ கஞ்சாவை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர். காவல்துறையினர் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி இருக்கின்றனர் என்பது உண்மை. இருந்தாலும் ஒரு சில இடங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எதிர்கட்சித் தலைவர் இதெல்லாம் புதிதாக நடைபெறுவது போல தெரிவித்துள்ளார். ஆனால் கடந்த ஆட்சிக் காலத்தில் குட்கா, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்கபட்டன; அதற்கு துணைபோன அமைச்சர் மீது சிபிஐ விசாரணை நடத்தியது. இது தமிழக மக்களுக்கு நன்றாகத் தெரியும். போதைப் பொருள் விற்பனையை கடந்த ஆட்சிக் காலத்தில் வளர்த்து விட்டு சென்றனர்.

ஆனால் தமிழக முதல்வர் ஸ்டாலின் கடந்த இரண்டு ஆண்டு காலமாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு போதைப் பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தியுள்ளார். பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தாலும் இதுபோன்ற ஒரு சில சம்பவங்கள் வருத்தமளிக்கின்றன. இச்சம்பவத்தில் காவல்துறையினர் 4 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இது மற்ற கவால்துறையினருக்கு பாடமாக அமையும். அமரன் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றவர்களும் விரைவில் கைது செய்யப்படுவார்கள். வரும் காலங்களில் கள்ளச்சாரம், போதைப் பொருட்கள் விற்பனை முழுமையாக தடுத்து நிறுத்தப்படும்." இவ்வாறு அமைச்சர் பொன்முடி தெரிவித்துள்ளார்.

## அன்னையர் தினம்: தயாளு அம்மாளிடம் வாழ்த்து பெற்ற முதல்வர்

சென்னை, மே. 15-
நேற்று அன்னையர் தினத்தையொட்டி கோபாலபுரம் இல்லத்திற்கு சென்று தனது தாயார் தயாளு அம்மாளிடம், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து பெற்றார். அப்போது துர்கா ஸ்டாலின் உடனிருந்தார்.



அன்னையர் தினத்தையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:

உடலுக்குள் இன்னொரு உயிராய் நம்மைச் சுமந்து, உயிருக்கும் மேலாய் அன்பு செலுத்திடும் அன்னையர் அனைவர்க்கும் அன்னையர் தின வாழ்த்துகள்! அன்பினால் அவனியை நிறைக்கும் தாயின் எதிர்பார்ப்புகளையும் விருப்பங்களையும் மதிப்போம், நிறைவேற்றுவோம்! என்று கூறியுள்ளார்.



சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில் உள்ள நூலகத்தை நேற்று தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன்தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் இரா. செல்வராஜ் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர்

## கே.கே.செல்லபாண்டியனின் தந்தை ஆசிரியர் கண்ணன் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, மே 15-
புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியனின் தந்தையார் ஆசிரியர் கண்ணன் அவர்கள் நேற்று (13.05.2023) சனிக்கிழமை மாலை இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இம் மறைவுச் செய்தியறிந்து துயருற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அன்னாரின் மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்கலை - மாவட்டச் செயலாளர் கே.கே. செல்ல பாண்டியன் மற்றும் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.



தமிழக அமைச்சர்கள் கே.என்.நேரு, ரகுபதி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மாநில, மாவட்ட ஒன்றிய நகர ஒன்றிய நகர நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தி வருகின்றனர் அவரது இறுதிச் சடங்கு இன்று காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற இருக்கின்றது.

## விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ.10 லட்சம் நிவாரணம்– முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, மே.15-
கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ.10 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் அருகே எக்கியார் குப்பத்தில் கள்ளச்சாராயம் அருந்தியதால் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சுரேஷ், சங்கர் மற்றும் தரணிவேல் ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையும், அதிர்ச்சியும் அடைந்தேன்.



கள்ளச்சாராயம் மற்றும் போதைப்பொருட்களை முற்றிலும் ஒழிக்க இந்த அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையில், இச்சம்பவம் நடைபெற்ற பகுதியைச் சேர்ந்த மரக்காணம் காவல் நிலைய ஆய்வாளர் அருள் வடிவழகன், உதவி ஆய்வாளர் தீபன், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு ஆய்வாளர் மரியா சோபி மஞ்சுளா மற்றும் உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் ஆகியோர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் கள்ளச்சாராயம் விற்பனை செய்த அமரன் கைது செய்யப்பட்டு உள்ளார். இதில் தொடர்புடைய இதர குற்றவாளிகளைத் தேடும் பணியும் விரைவுபடுத்தப்பட்டு உள்ளது. மேலும், இச்சம்பவத்தில் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளித்திட அறிவுறுத்தியுள்ளேன். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் மற்றும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த வர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10 லட்சமும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.




# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

நம்மை நாம்
கேள்வி கேட்காதவரை..
நம் தவறுகளை
நாம் உணரபோவதில்லை...








தென்காசி வடக்கு மாவட்டம்-சங்கரன்கோவில் தொகுதியில் திமுக அரசு அமைந்த உடன் பல எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சங்கரன்கோவில் ராஜா சட்டமன்றத்தில் சங்கரன்கோவில் மருத்துவமனைக்கு புதிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். கோரிக்கையை ஏற்ற முதல்வர் மற்றும் அமைச்சர் ஆகியோர் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் 9 கோடி மதிப்பீட்டில் முன்னோக்கு மருத்துவ கட்டிடங்கள் கட்டுவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது இதற்காக தமிழ்நாடு அரசு 9 கோடி நிதி ஒதுக்கியது. இந்நிலையில் புதிய மருத்துவ கட்டிடங்கள் கட்டுவதற்கான இடங்களை அரசு மருத்துவமனைக்கு நேரில் சென்று வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா ஆய்வு செய்தார். அப்போது பொதுப்பணித்துறை கோட்ட பொறியாளர் ராஜசேகரன், உதவி கோட்ட பொறியாளர் உலகம்மாள், செயற்பொறியாளர் அழகர்சாமி ,உதவி செயற்பொறியாளர் ஜான் ஆசீர் ,உதவி பொறியாளர்கள் சுரேந்தர், பாக்கியநாதன், மற்றும் மருத்துவர்கள் மருத்துவமனை ஊழியர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தார்கள்.

## காவல் நிலைய செலவு என்ற பெயரில் ரூ.3,000 லஞ்சம் வாங்கியதாக பெண் எஸ்.ஐ. கைது

திருவண்ணாமலை மே 15

காவல் நிலைய செலவு என்ற பெயரில் ரூ.3 ஆயிரம் லஞ்சம் வாங்கிய திருவண்ணாமலை அனைத்து மகளிர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் பரமேஸ்வரி சனிக்கிழமை கைது செய்யப்பட்டார்.



திருவண்ணாமலை அடுத்த கீழ்பாலானந்தல் கிராமத்தில் வசிப்பவர் வெற்றிவேல். இவரது மனைவி பரிமளா. இத்தம்பதி இடையே கருத்து வேறுபாடு காரணமாக அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால், பூந்தமல்லியில் உள்ள சகோதரர் வீட்டுக்கு பரிமளா சென்றுள்ளார். மேலும் அவர், திருவண்ணாமலை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.

இது தொடர்பாக வெற்றிவேலை அழைத்து சிறப்பு உதவி ஆய்வாளர் பரமேஸ்வரி கடந்த 11-ம் தேதி விசாரணை நடத்தியுள்ளார். அப்போது அவர், வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்காமல் ,காவல் நிலைய செலவு என்ற பெயரில் ரூ.3 ஆயிரம் லஞ்சம் கேட்டுள்ளார்.

இது குறித்து திருவண்ணாமலை மாவட்ட லஞ்ச ஒழிப்பு காவல்துறையிடம் கடந்த 12-ம் தேதி, வெற்றிவேல் புகார் அளித்துள்ளார். இதையடுத்து அவர்களது அறிவுரையின் பேரில், அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணியில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் பரமேஸ்வரிடம் லஞ்ச பணம் ரூ.3 ஆயிரத்தை வெற்றிவேல் நேற்று கொடுத்தார். அப்போது, மறைந்திருந்த டிஎஸ்பி வேல்முருகன் தலைமையிலான காவல் துறையினர், காவல் நிலையத்திலேயே பரமேஸ்வரியை கையும், களவுமாக பிடித்தனர்.

மேலும் இதுகுறித்து வழக்குப் பதிவு செய்து பரமேஸ்வரியை கைது செய்தனர். ரூ.3 ஆயிரம் லஞ்ச பணத்தையும் பறிமுதல் செய்துள்ளனர்.

## அதிக பெண் எம்.எல்.ஏ.க்களை வரவேற்கும் கர்நாடக சட்டப்பேரவை

பெங்களூரு மே 15

கர்நாடகத்தில் 16-வது சட்ட சபையை தேர்ந்தெடுப்பதற்காக 224 தொகுதிகளை கொண்ட கர்நாடக சட்டசபைக்கு கடந்த 10-ந்தேதி தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் 2 ஆயிரத்து 615 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர்.



கர்நாடக சட்டசபை தேர்தலில் 136 தொகுதிகளை கைப்பற்றி, அறுதிப்பெரும்பான்மை பலத்துடன் காங்கிரஸ் ஆட்சியைப்பிடித்துள்ளது. பாரதீய ஜனதாவும், மதசார்பற்ற ஜனதா தளமும் பின்னடைவை சந்தித்து இருக்கின்றன.

இந்த நிலையில், கர்நாடக தேர்தல் வரலாற்றில் 2-வது அதிக பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்வாகி உள்ளனர். பாஜகவில் இருந்து 5பேர், காங்கிரசில் இருந்து 4 பேர் ம.ஜ.த, மற்றும் சுயேட்சை வேட்பாளர் ஒருவர் என மொத்தம் 11 பேர் வெற்றிபெற்றுள்ளனர்.

இதற்கு முன்பு கடந்த 1962-ம் ஆண்டு அதிகபட்சமாக 18 பெண் எம்.எல்.ஏ.க்கள் தேர்வாகி இருந்தது குறிப்பிடத்தக்கது.

### சென்னையில் 3 வாரங்களில்

## 1,929 ஆக்கிரமிப்புகள் அகற்றம் – மாநகராட்சி தகவல்

சென்னை , மே.15-

சென்னையில் 3 வாரங்களில் 1,929 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளதாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.



சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களில் பொது இடங்கள் மற்றும் நடைபாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், பொது இடங்களில் கொட்டப்படும் கட்டிடக் கழிவுகளை அகற்றவும் மண்டல அலுவலர் தலைமையில் மண்டல பறக்கும் படை அமைக்கப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்குழுவானது வாரத்தில்மூன்றுநாட்கள் அதாவது திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய கிழமைகளில் முக்கிய சாலைகளில் ஜே.சி.பி., டாடா ஏஸ் வாகனம் மற்றும் பணியாளர்களுடன் ரோந்து பணியில் ஈடுபட்டு, பொது இடங்கள் மற்றும் நடைபாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் மற்றும் கட்டிடக் கழிவுகளை அகற்றி வருகிறது.

அதனடிப்படையில், மாநகராட்சி அலுவலர்களால் காவல் துறை அலுவலர்களுடன் இணைந்து சிறப்பு நடவடிக்கையாக கடந்த மூன்று வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளில் 15 மண்டலங்களில் பொது இடங்கள் மற்றும் நடைபாதைகளில் 563 நிரந்தர கட்டுமானங்களுடன் கூடிய ஆக்கிரமிப்புகள் மற்றும் 1,366 தற்காலிக கூடாரங்கள் போன்ற ஆக்கிரமிப்புகள் என மொத்தம் 1,929 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு அப்புறப்படுத்தப் பட்டுள்ளன.

மேலும், சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை மேற்கொண்டவர்கள் தாமாகவே முன்வந்து ஆக்கிரமிப்புகளை அகற்றிட வேண்டும்; அவ்வாறு அகற்றப்படாத ஆக்கிரமிப்புகள் சென்னை மாநகராட்சியால் அகற்றப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.







## குஜராத் ஏரியில் மூழ்கி 5 வாலிபர்கள் உயிரிழப்பு

குஜராத், மே. 15-

குஜராத் மாநிலம் பொடாட் நகரில் உள்ள கிருஷ்ணா சாகர் ஏரியில் குளிப்பதற்காக வாலிபர்கள் 5 பேர் சனிக்கிழமை மதியம் சென்றுள்ளனர். முதலில் 2 வாலிபர்கள் ஏரியில் இறங்கி நீந்திக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக இருவரும் நீருக்குள் திடீரென மூழ்கத் தொடங்கினர்.

இதைக்கண்டு அதிர்ச்சியடைந்து கரையில் இருந்த மூன்று வாலிபர்களும் ஏரியில் மூழ்கிய நண்பர்களை காப்பாற்ற முயன்று ஏரியில் குதித்தனர். ஆனால், அவர்களும் நீரில் மூழ்கினர். இதில், 5



வாலிபர்களும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த வந்த போலீசார், நீரிழ் மூழ்கி உயிரிழந்த 5 சிறுவர்களின் சடலங்களையும் மீட்டனர். மேலும், சம்பவம் குறித்து போலீசார் வழக்குப் பதிவு செய்து மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர். ஏரியில் மூழ்கி 5 பேர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## ஓடும் ரயிலில் இருந்து இறங்கியபோது தண்டவாளத்தில் சிக்கியவரை மீட்ட ஆர்பிஎப் வீரர்

### சேலம் ரயில்வே ஸ்டேஷனில் பரபரப்பு



சேலம் மே 15

சேலம் ரயில்வே ஸ்டேஷனில் ஓடும் ரயிலில் இருந்து இறங்கியபோது கால் தவறி ரயிலுக்கு அடியில் சிக்க இருந்தவரை ஆர்பிஎப் வீரர் காப்பாற்றினார்.

பெங்களூரு - நாகர்கோவில் எக்ஸ்பிரஸ், சேலம் ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தது. பிளாட்பார்ம் 1ல் வந்து நின்ற ரயிலில், பயணிகள் ஏறினர். பின்னர், அந்த ரயில் புறப்பட்டது. அப்போது, ஒரு தம்பதி ஓடும் ரயிலில் ஏறுவதற்கு ஓடி வந்தனர்.

முதலில் கணவர், எஸ்-7 பெட்டியில் ஏறினார். அவரது மனைவி, அந்த பெட்டியில் ஏற முயன்றபோது கால் தவறி பிளாட்பார்மில் விழுந்தார். பதறிய கணவர், ஓடும் ரயிலில் இருந்து இறங்கினார். அப்போது கால் தவறி தண்டவாளத்திற்கும், ரயிலுக்கும் இடையில், ரயில் பெட்டியின் கைப்பிடி கம்பியை பிடித்தபடி தொங்கிச் சென்றார். ரயிலின் வேகம் அதிகரித்த நிலையில், அவர் ரயிலுக்கு அடியில் சிக்கிவிடுவார் என அங்கிருந்த பயணிகள் கூச்சலிட்டனர்.

அப்போது, பிளாட்பார்மில் ரோந்து பணியில் இருந்த ஆர்பிஎப் வீரர் அஜித், மிக சாதுர்யமாக செயல்பட்டு, அவரை வெளியே இழுத்து காப்பாற்றினார். விசாரணையில் அவர், கரூர் மாவட்டம் இனாம்கரூரை சேர்ந்த ரவிக்குமார் (50) என்றும் முன்பதிவில்லாத டிக்கெட் எடுத்து ரயிலில் ஏற முயன்றபோது இந்த சம்பவம் நடந்ததும் தெரிய வந்தது. அவருக்கு ஏற்பட்ட லேசான காயத்துக்கு முதலுதவி சிகிச்சை அளித்து அடுத்த ரயிலில் கரூர் செல்ல அறிவுறுத்தி அனுப்பி வைத்தனர்.

## தமிழக அரசுக்கு எதிராக முகநூலில் அவதூறு கருத்துகளை பரப்பியவர் கைது

மதுரை, மே.15-

மதுரை மாவட்டத்தில் சைபர் குற்றங்களில் ஈடுபடும் நபர்களை, கண்காணித்து நடவடிக்கை எடுக்கும் வகையில் மாவட்ட காவல்துறை சார்பில் சமூகவலைதள பிரிவு செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் பல்வேறு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு வருகின்றார்கள்.

இந்தநிலையில், திண்டுக்கல் மாவட்டம் மட்டப்பாறையை சேர்ந்த விஜயகுமார் (வயது 47) என்பவர், பேஸ்புக்



(முகநூல்) பக்கத்தில் தமிழக அரசுக்கு எதிராகவும், சட்டம் ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தும் வகையிலும் தொடர்ந்து சர்ச்சைக்குரிய கருத்துகளை பதிவிட்டு வந்ததாக, மதுரை மாவட்ட சைபர் கிரைம் போலீசில் புகார் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் வழக்குப்பதிவு செய்த மதுரை மாவட்ட சைபர் கிரைம் போலீசார் விஜயகுமாரை தேடிவந்தனர்.

அதன்பேரில் நேற்று அவரை மதுரை மாவட்ட சைபர் கிரைம் போலீசார் கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். மேலும் இதுபோன்று சமூக வலைதளங்கள் மூலமாக சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சினை ஏற்படுத்தும், தவறான கருத்துகளை பதிவிடும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சிவபிரசாத் தெரிவித்துள்ளார்.

## கர்நாடக முதல்வரை கட்சி தலைமை முடிவு செய்யும் காங்கிரஸ் சட்டமன்ற கூட்டத்தில் தீர்மானம்!

பெங்களூரு , மே. 15-

கர்நாடக மாநிலத்தில் நடைபெற்று முடிந்த சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி 135 இடங்களில் வெற்றி பெற்று, தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க இருக்கிறது. காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றதை அடுத்து, கர்நாடக முதல்வர் யார் என்ற கேள்வி பரவலாக எழுந்துள்ளது.

இந்த நிலையில், காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நேற்று மாலை பெங்களூருவில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் காங்கிரஸ் சார்பில் வெற்றி பெற்ற 135 சட்டமன்ற உறுப்பினர்களுடன்,



சுயேட்சையாக வெற்றி பெற்று காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு தெரிவித்த இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சட்டமன்ற கூட்டம் காங்கிரஸ் மூத்த தலைவர் சுஷில் குமார் ஷிண்டே, பொதுச் செயலாளர் ஜிதேந்திர சிங் மற்றும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் பொது செயலாளர் தீபக் பபாரியா ஆகியோர் பார்வையாளர்களாக செயல்பட்டனர். அதன்படி சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கர்நாடக மாநிலத்தில் முதல்வரை கட்சி மேலிடம் தேர்வு செய்ய ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.

### பள்ளத்தாக்கில் கவிழ்ந்த பஸ்

## நூலிழையில் பெரும் விபத்து தவிர்ப்பு பயணிகளின் உயிரை காப்பாற்றிய ஒற்றை மரம்

திருவனந்தபுரம் மே 15

கர்நாடக மாநிலம் மைசூரில் இருந்து கேரள மாநிலம் திருவனந்தபுரத்திற்கு அரசு பஸ்சென்றுகொண்டிருந்தது. கோழிக்கோடு அருகே மலைப்பாங்கான சாலையில் பஸ் சென்று கொண்டிருந்த போது தமரசேரி பகுதியில் எதிர்பாராத விதமாக சாலையில் இருந்து விலகிய பஸ் மலைப்பகுதியில் இருந்து பள்ளத்தாக்கில் கவிழ்ந்த்து. அப்போது, சாலையோரத்தில் இருந்த



ஒரு மரத்தில் மோதி பஸ் மிகவும் ஆபத்தான நிலையில் நின்றது.

உடனடியாக அதில் இருந்த பயணிகள் அனைவரும் பத்திரமாக கீழே இறங்கினர். இந்த விபத்தில் பயணிகள் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. இந்த விபத்து குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். மலைப்பகுதியில் உள்ள சாலையில் கொண்டை ஊசி வளைவில் திரும்பும்போது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் பள்ளத்தில் கவிழ்ந்தது. அப்போது, சாலையோரம் இருந்த மரத்தில் மோதி பஸ் நின்றதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

## தென்காசி மாவட்ட அளவில் பிளஸ் டு தேர்வில் முதலிடம் பெற்ற விவேகானந்தா பள்ளி மாணவிகள்

### மாவட்ட ஆட்சியரிடம் வாழ்த்து பெற்றனர்




தென்காசி மே 15

தென்காசி மாவட்டம் வீரசிகாமணி விவேகானந்தா வெள்ளிவிழா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் தென்காசி மாவட்ட அளவில் முதலிடம் பெற்று சாதனை படைத்த சிபிகாதர்ஷினி 596 மதிப்பெண்கள் பெற்று மாவட்ட அளவில் முதலிடமும், இவர் கணிதம், இயற்பியல், உயிரியல், ஆகிய பாடங்களில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பிரியதர்ஷினி 584 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடமும் பிடித்துள்ளனர்.

இந்த இரு மாணவிகளும் இரட்டை சகோதரிகள் ஆவார்கள். இவர்கள் இருவரும் பள்ளியின் முதல்வர் கல்யாண சுந்தரம் தலைமையில் தென்காசி மாவட்ட ஆட்சியர் துரை ரவிச்சந்திரனை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இதில் பள்ளியின் நிர்வாகி பெலின்ஸ் மற்றும் மாணவிகளின் பெற்றோர் கலந்து கொண்டார்கள்.

# தொகுப்பு வீட்டின் மேற்கூரை பூச்சு உடைந்து விழுந்ததில் சிறுவன் படுகாயம்



திருவள்ளூர், மே, 15 –
திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலகம் அருகே திருப்பாச்சூர் கிராமத்தில் உள்ள தொகுப்புவீட்டில்வசித்து வருபவர் மோகன்ராஜ் (வயது 32). இவர் தனியார் நிறுவனத்தில் ஒப்பந்த ஊழியராக பணியாற்றி வருகிறார். இவரது மனைவிசுபதரா ஆவார்.

இத்தம்பதியினருக்கு சாதனா என்ற மகளும், நிதிஷ்குமார், சூர்யா (வயது 6) என்ற இரண்டு மகன்களும் உள்ளனர். நேற்று முன்தினம் நிதிஷ்குமார்மற்றும்சூர்யா வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது வீட்டின் மேற்கூரைபூச்சுதிடீரென உடைந்து விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் மீது விழுந்தது. இதில் சூர்யாவின் நெத்தியில் படுகாயம் ஏற்பட்டது. இதனால் ரத்தம் குபு, குபு என கொட்டியது. அருகில் இருந்தவர்கள் சூர்யாவை மீட்டு திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்று அனுமதித்தனர்.

அங்கு அவருக்கு டாக்டர்கள்தீவிரசிகிச்சை அளித்து வருகின்றனர். இந்த சம்பவம் குறித்து திருவள்ளூர் தாலுகா காவல் நிலையபோலீசார் வழக்கு பதிவு செய்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.

# வயிற்று வலியால் அவதிப்பட்ட கூலித் தொழிலாளி எலி மருந்து குடித்து பலி

திருவள்ளூர், மே, 15 –
திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியம், மெய்யூர் ஊராட்சி, வேம்பேடு கிராமம், இருளர் காலனியில் வசித்து வந்தவர் ராஜேஷ் (வயது 35) கூலித் தொழிலாளி ஆவார். இவருக்கு கடந்த ஆறு மாதங்களாக தீராத வயிற்று வலி இருந்து வந்தது.

நேற்று மதியம் வீட்டில் தனியாக இருந்தபோது இவருக்கு கடுமையான வயிற்று வலி ஏற்பட்டதாம். இதனால் மனம் உடைந்த அவர் எலி மருந்தை சாப்பிட்டு விட்டார். சிறிது நேரத்தில் அலறி துடித்து மயங்கி விழுந்தார். அவரை அருகில் இருந்தவர்கள் மீட்டு திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று அனுமதித்தனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் ஏற்கனவே ராஜேஷ் இறந்துவிட்டார் என கூறினர்.

இந்தசம்பவம் குறித்து நேற்று அவரது மனைவி பிரியாபெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் செய்தார். எனவே போலீசார் வழக்கு பதிவு செய்து இச்சம்பவம் குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.

# ஆரணியில் கஞ்சா, பட்டா கத்தியுடன் சுற்றி திரிந்த வாலிபர் கைது

ஊத்துக்கோட்டை, மே, 15 –
திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி காவல் நிலைய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பாஸ்கர் தலைமையில் போலீசார் நேற்று ரோந்து பணியை மேற்கொண்டனர்.

ஆரணி, சுப்பிரமணிய நகர் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான வகையில் நின்று கொண்டிருந்த ஒரு வாலிபரை போலீசார் சுற்றிவளைத்து பிடித்தனர். அந்த வாலிபரை போலீசார் சோதனை செய்த போது





சுமார் 1,200 கிராம் எடை கொண்ட கஞ்சாவை மறைத்து வைத்திருந்தார். மேலும் இரண்டரை அடி உயரம் கொண்ட பட்டாக்கத்தியை மறைத்து வைத்திருந்தார். அந்த வாலிபரை காவல் நிலையம் கொண்டு வந்து விசாரணை மேற்கொண்டனர்.

அந்த வாலிபர் பெயர் கார்த்திகேயன் (வயது 21). ஆரணி எஸ்.பி.கோவில் தெருவை சேர்ந்தவர் எனத் தெரிந்தது. இவர் மீது பல்வேறு வழக்குகள் இருப்பதும் தெரிய வந்தது.

எனவே போலீசார் கார்த்திகேயன் மீது வழக்கு பதிவுசெய்து பொன்னேரி முதல் நிலை குற்றவியல் நீதிமன்றம் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர். பின்னர் அவரது உத்தரவின் பேரில் புழல் சிறையில் போலீசார் அடைத்தனர்.

# தனியார் தொலைக்காட்சி ஊழியர் வீட்டில் தங்க நகைகள், ரொக்க பணம் கொள்ளை

## மர்ம நபர்களுக்கு போலீசார் வலை வீச்சு





திருவள்ளூர், மே, 15 –
திருவள்ளூர் மாவட்டம்,வேப்பம்பட்டு கிராமம், ராமகிருஷ்ணா நகரில் சண்முகம் என்பவர் குடும்பத்துடன் வசித்து வருகிறார். இவர் ஒரு தனியார் தொலைக்காட்சியில் ஊழியராக பணியாற்றி வருகிறார். இவரது மனைவியும் ஒரு தனியார் தொலைக்காட்சியில் பணியாற்றி வருகிறார்.

முன்னதாக கோடை விடுமுறைக்காக இத்தம்பதியினர் தங்களது குழந்தைகளை திருநெல்வேலியில் உள்ள உறவினர்கள் வீட்டில் கொண்டு சென்று விட்டு, விட்டு வந்தனர். எனவே குழந்தைகளை அழைத்து வர நேற்று முன்தினம்இரவுகணவன், மனைவி இருவரும் திருநெல்வேலிக்கு சென்றனர்.

நேற்று காலை இவர்களதுவீட்டின்பூட்டு உடைக்கப்பட்டு கதவு திறந்துகிடந்தது.இதனால் அக்கம் பக்கத்தினர் சண்முகத்துக்கு தகவல் கொடுத்தனர். மேலும் செவ்வாய்பேட்டை காவல் நிலையத்துக்கும் தெரியப்படுத்தினர். சம்பவ இடத்திற்கு செவ்வாப்பேட்டை காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் பாஸ்கர் தலைமையில் போலீசார் விரைந்து வந்தனர்.

விசாரணையில் இரண்டு பீரோக்களை உடைத்து ரூ.5 லட்சம் மதிப்புள்ளசுமார்12சவரன் தங்க நகைகளையும், குடியிருப்போர் நல சங்கத்தின் சந்தா தொகையான ரூ.1.25 லட்சம்ரொக்கப்பணமும் கொள்ளை போனது தெரிய வந்தது.

இப்பகுதியில் இருந்த கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தபோது நேற்று முன் தினம் இரவு இரண்டு மணி அளவில் சில மர்ம நபர்கள் இப்பகுதியில் வீடுகளை நோட்டமிட்ட காட்சிகள் பதிவாகி இருந்தது. இதன் அடிப்படையில் போலீசார் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட மர்ம நபர்கள் குறித்து விசாரணைமேற்கொண்டு வருகின்றனர். மேலும் நேற்று முன் தினம் இரவே அடுத்தடுத்த மூன்று வீடுகளில் கொள்ளை முயற்சி நடந்துள்ளது. இச்சம்பவம்இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கிராம நிர்வாக அதிகாரி அலுவலகம் அருகே

# அனுமதி இன்றி பேனர் வைத்த 12 பேர் மீது போலீசார் வழக்கு பதிவு

ஊத்துக்கோட்டை, மே, 15 –
திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பாலவாக்கம் கிராம நிர்வாக அதிகாரி அலுவலகம் அருகே பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறாக 20 அடி நீளமும், பத்து அடி அகலமும் கொண்ட பேனர் ஒன்றை சிலர் வைத்துள்ளனர்.

ஊத்துக்கோட்டை காவல் நிலைய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் முருகேசன் தலைமையில் போலீசார் நேற்று மாலை ரோந்து வந்தனர். அப்போதுஅனுமதிஇன்றி பேனர் வைத்திருந்ததை பார்த்தனர். இதனால் பேனர் வைத்த பாலவாக்கத்தைச்சேர்ந்த 12 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

# மேட்டுப்பாளையம் – நெய்வேலி கிராமத்தில் மோட்டார் சைக்கிளுடன் பான் மசாலா பொருட்கள் பறிமுதல் 3 பேர் கைது

திருவள்ளூர், மே, 15 –
திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் காவல் நிலைய சிறப்பு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் போலீசார் ரோந்து பணி மேற்கொண்டனர். மேட்டுப்பாளையம் கிராமத்தில் வாட்டர் டேங்க் அருகே வாகன சோதனை மேற்கொண்டனர்.

அப்பொழுது சந்தேகத்துக்கு இடமான வகையில் ஒருமோட்டார் சைக்கிளில் வந்த இருவரை வழிமடக்கி நிறுத்தி சோதனை மேற்கொண்டனர். அப்பொழுது அவர்கள் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பான் மசாலா பொருட்கள் விற்பனை செய்ய கொண்டு வந்ததை



ஒப்புக்கொண்டனர். அவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் மற்றும் 168 பாக்கெட் பான் மசாலா பொருட்களைபோலீசார் பறிமுதல் செய்தனர். விசாரணையில் அவர்கள் மேட்டுப்பாளையம் கிராமம் செல்லப்பா (வயது 59), ஜனப்பன்சத்திரம், கிருபா நகரைச் சேர்ந்த சிவா (வயது 55) என்பது தெரிய வந்தது.

நெய்வேலி கிராமத்தில் ஒரு கடையில் போலீசார் சோதனை செய்தபோது அங்கு தமிழக அரசால் தடை செய்யப்பட்ட 450 பான் மசாலா பொருட்கள் இருந்தது. அதனை போலீசார் பறிமுதல் செய்தனர். கடையின் உரிமையாளர் நெய்வேலி கிராமத்தைச் சேர்ந்த அலி (வயது 55) என்பவரை கைது செய்தனர்.

மூவரையும்போலீசார் காவல் நிலையம் கொண்டு வந்தனர். அவர்கள் மூவர் மீதும் போலீசார் வழக்கு பதிவு செய்து ஊத்துக்கோட்டை முதல் நிலை குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்திரேட்டு முன்னிலையில் ஆஜர் செய்து புழல் சிறையில் அடைத்தனர்.

திராவிட மண்ணில் பாஜக வரமுடியாது என

# தனது திருப்திக்காக ஸ்டாலின் சொல்கிறார்: எல்.முருகன்

புதுச்சேரி, மே, 15 –
திராவிட மண்ணில் பாஜக வர முடியாது என்று தனது திருப்திக்காக ஸ்டாலின் சொல்லி வருகின்றார் என மத்திய இணை அமைச்சர் எல். முருகன் விமர்சித்துள்ளார்.



இரண்டு நாள் பயணமாக புதுச்சேரி வந்த மத்திய இணை அமைச்சர் எல். முருகன் ராஜ்பவன் தொகுதி வைத்திகுப்பம் பகுதியில் நடந்த மீனவர்களின் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். மீனவர்களுக்காக மத்திய அரசுநடைமுறைப்படுத்தி வரும் திட்டங்களை எடுத்துக் கூறி அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ''தமிழ் மண்ணான புதுச்சேரியில் பாஜகவின் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி இருந்து கொண்டிருக்கிறது. தேர்தலில் வெற்றி தோல்வி என்பது சகஜமானது. தமிழகத்தில் கூட திமுக பலமுறை தூக்கி எறியப்பட்டது. எம்.ஜி.ஆர் இருந்தபோது திமுக வெற்றி பெறுவதே கடினமாக இருந்தது. கருணாநிதி ஒருவர் மட்டுமே வெற்றி பெற்றுக் கொண்டிருந்தார். ஆகவே ஒரு தேர்தலை வைத்து மட்டுமே மற்ற விஷயங்களை சொல்ல முடியாது.

தமிழகம், புதுச்சேரியில் பாஜக மிகப்பெரிய வளர்ச்சியை பெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் பாஜக எம்எல்ஏக்கள் இருந்து கொண்டிருக்கின்றோம். புதுச்சேரியில் பாஜகவின் தேசிய ஜனநாயக ஆட்சி நடக்கிறது. அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் உள்ளோம். எனவே, திராவிட மண்ணில் பாஜக வரமுடியாது; பாஜக துடைத் தெரியப்பட்டுள்ளது என்று ஸ்டாலின் கூறுவது அவருடைய கற்பனை. தனது திருப்திக்காக இதுபோன்று அவர் சொல்லி வருகின்றார். உண்மையில் பாஜகவுக்கு மிகப்பெரிய வரவேற்பு இருந்து கொண்டிருக்கிறது. கர்நாடக மாநிலத்தில் 2018-ல் பாஜகவின் வாக்கு சதவீதம் எப்படி இருந்ததோ, அதே போன்ற வாக்கு சதவீதம் இப்போதும் உள்ளது.'' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தென்காசி மாவட்டம்–குற்றாலத்தில் தேசிய அளவிலான வலுதூக்கும் போட்டி



தென்காசி மே 15
தென்காசிமாவட்டம்-குற்றாலத்தில் தேசிய அளவிலான நடக்கும் வலுதூக்கும்போட்டியில் 24 மாநிலங்களில் இருந்து கலந்துகொண்ட 600க்கும் மேற்பட்ட வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்பு. இந்திய வலுத்தூக்கும் சங்கம் மற்றும் தமிழ்நாடு வலுதூக்கும் சங்கம் சார்பில் தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி நினைவாக ஜூனியர் சப் ஜூனியர் பிரிவுக்கான தேசிய வலுதூக்கும் சாம்பியன்ஷிப் போட்டி குற்றாலம் கலைவாணர் கலையரங்கத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த போட்டியின் தொடக்க நிகழ்ச்சியாக சனிக்கிழமை மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு வலுதூக்கும் சங்கமாநிலத் தலைவரும் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான ராஜா, மாநிலச் செயலாளர் நாகராஜன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்த போட்டியில் இந்தியா முழுவதும் 24 மாநிலங்களில் இருந்து சுமார் 600க்கும் மேற்பட்ட வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை கலந்து கொள்கிறார்கள் இந்த போட்டி வருகின்ற 17ஆம் தேதி வரை நடைபெற இருக்கிறது.

சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் 53-59 கிலோ உடல்பிரிவில் நடைபெற்ற போட்டியில் கேரளா, ஆந்திரா, கர்நாடகா, பஞ்சாப், மகாராஷ்டிரா, கோவா மாநிலத்தில் இருந்து வந்த வீரர்கள் பரிசுகளை தட்டிச் சென்றனர். இதற்கான ஏற்பாடுகளை தேசிய வலுதூக்கும் சங்க செயலாளர், ஜோசப் தேசிய வலுதூக்கும் சங்க தலைவர் சதீஷ்குமார், நெல்லை மாவட்ட தலைவர் சிவராமலிங்கம், செயலாளர் சண்முகசுந்தரம், தென்காசி மாவட்ட செயலாளர் நாகராஜன், மற்றும் நிர்வாகிகள் முருகன், ரவிக்குமார், குத்தாலிங்கம் சரவணகுமார், ஜோதிமாணிக்கம், ஹிரா அப்துல் ரசாக், உள்ளிட்டோர் நிகழ்ச்சியை நடத்தி வருகின்றார்கள்.

# தமிழக அரசு தூக்கத்திலிருந்து விழித்து, கள்ளச்சாராய விற்பனையை ஒழிக்கக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் – அண்ணாமலை

சென்னை, மே.15–
தமிழக அரசு தூக்கத்திலிருந்து விழித்து, கள்ளச்சாராய விற்பனையை ஒழிக்கக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக பாஜக சார்பாக வலியுறுத்துகிறேன்.



தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை வெளியிட்ட டுவிட்டர் பதிவில், மரக்காணம் பகுதியில் கள்ளச் சாராயம் உட்கொண்டதால், சுரேஷ், சங்கர், தரணிவேல் எனும் மூன்று பேர் உயிரிழந்த செய்தி மிகவும் அதிர்ச்சி அளிக்கிறது. மேலும், கவலைக்கிடமான நிலையில் 16 பேர், மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்றும் தெரிகிறது.

அவர்கள் விரைவில் உடல் நலம் பெற வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். டாஸ்மாக் மூலம் கட்டுப்பாடற்ற சாராய விற்பனை ஒரு புறம் நடந்து கொண்டிருக்க, தற்போது கள்ளச் சாராய விற்பனையும் தலைதூக்கியிருப்பது திமுக அரசின் செயலற்ற தன்மையைக்காட்டுகிறது. உடனடியாக தமிழக அரசு தூக்கத்திலிருந்து விழித்து, கள்ளச் சாராய விற்பனையை ஒழிக்கக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக பாஜக சார்பாக வலியுறுத்துகிறேன் என தெரிவித்துள்ளார்.

# ஐபிஎல் டிக்கெட்டுகளை கள்ள சந்தையில் அதிக விலைக்கு விற்றதாக 9 பேர் கைது

சென்னை, மே, 15 –
ஐபிஎல் டிக்கெட்டுகளை கள்ள சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்தது தொடர்பாக 9 பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

சென்னை சேப்பாக்கம், எம்.ஏ.சிதம்பரம் கிரிக்கெட் மைதானத்தில் சென்னை மற்றும் கொல்கொத்தா அணிகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டி நேற்று(ஞாயிறு) நடைபெறுவதை யொட்டி டிக்கெட்டுகளை கள்ள சந்தையில் சட்ட விரோதமாக விற்பனை செய்பவர்களை கண்காணித்து கைது செய்ய சென்னை காவல் ஆணையாளர் சங்கர் ஜிவால், உத்தரவிட்டதின்பேரில், உயர் அதிகாரிகளின் நேரடி மேற்பார்வையில்,



காவல் ஆய்வாளர்கள் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு கண்காணித்து வந்தனர்.

அதன்பேரில், டி1 திருவல்லிக்கேணி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை காவல் குழுவினர் சேப்பாக்கம், கிரிக்கெட் மைதானம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளான பட்டாபிராம் கேட், வாலாஜாசாலை, பெல்ஸ் ரோடு, வாலாஜா ரோடு சந்திப்பு, விக்டோரியா ஹாஸ்டல் சாலை சந்திப்பு, சேப்பாக்கம் இரயில்வே ஸ்டேஷன் மற்றும் சில இடங்களில் தீவிரமாக கண்காணித்து, அங்கு கிரிக்கெட் போட்டிக்கான டிக்கெட்டுகளை சட்ட விரோதமாக கள்ள சந்தையில் (Black Market) அதிகவிலைக்குவிற்பனை செய்தது தொடர்பாக 8 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 9 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட முத்துஜா, அஜித், விஷால் ராஜ், பரத், விவேக், ஆஷிஷ், அபிஷேக், திருப்பதி, முகிலன் ஆகிய 9 நபர்களை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து 17 டிக்கெட்டுகள் மற்றும் ரூ.13,350 பணம் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணைக்குப்பின்னர் கைது செய்யப்பட்ட 9 நபர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# சட்டப்பேரவைத் தேர்தல் முடிவை வைத்து மக்களவை தேர்தலை தீர்மானிக்க முடியாது: கார்த்தி சிதம்பரம்

காரைக்குடி, மே, 15 –
சட்டப்பேரவைத் தேர்தல் முடிவை வைத்து மக்களவை தேர்தலை தீர்மானிக்க முடியாது என சிவகங்கை எம்பி கார்த்தி சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

காரைக்குடியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "கர்நாடகாவில் பாஜக ஊழல் ஆட்சியை மக்கள் விரட்டியுள்ளனர். காங்கிரசுக்கு கொடுத்த மகத்தான வெற்றி எங்களுக்கு உத்வேகத்தை கொடுத்துள்ளது. ஒவ்வொரு தேர்தலிலும் மக்கள் நலத் திட்டங்கள் கொண்டவாக்குறுதிகளை காங்கிரஸ் அறிவித்து வந்துள்ளது. அவை தேர்தல் சமயத்தில் அறிவித்ததால் மக்களை சென்றடையவில்லை.

ஆனால்கர்நாடகாவில் 6 மாதங்களுக்கு முன்பே வாக்குறுதிகளை வெளியிட்டதால் நல்ல பலன் கிடைத்தது. இதே உத்தியை மக்களவைத் தேர்தலிலும் பயன்படுத்த வேண்டும். கர்நாடகாவில் டி.கே.சிவக்குமார், சித்தராமையா போன்ற



மாநிலத் தலைவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆனால் அவர்களை போன்ற தலைவர்கள் தமிழக காங்கிரசில் இல்லை. அதுபோன்றதலைமையை உருவாக்கினால் நிச்சயமாக பலன் இருக்கும்.

சட்டப்பேரவைத் தேர்தல் முடிவை வைத்து மக்களவை தேர்தல் அமையும் என கூற முடியாது. ஆனால் கர்நாடகா வெற்றி எங்களுக்கு பலத்தை கொடுக்கும். காவிரி பிரச்சினை இரண்டு மாநிலங்களுக்கும் இடையேயானது. அதை ராஜாங்கரீதியான பேச்சு வார்த்தை மூலமே தீர்க்க முடியும். உள்கட்சிக்குள் பேசி தீர்க்க முடியாது. காங்கிரஸ் தேசிய கட்சியாக இருந்தாலும் அந்தந்த மாநில நலனை கருத்தில் கொண்டே செயல்படுகிறது. மேகேதாது அணை விவகாரத்திலும் அதே நிலை தான். இதனால் கர்நாடககாங்கிரஸ், தமிழக காங்கிரஸ்இடையேகருத்து வேறுபாடு என்று சொல்ல முடியாது. கர்நாடக தேர்தல் பணிக்காக 15 நாட்களுக்கு முன்பு தான், தமிழகத்தில் இருந்து சென்றோம். நாங்கள் பார்வையாளர்களாகத் தான் இருந்தோம். அந்த வெற்றியில் எங்களுக்கு ஒரு துளி கூட பங்கு கிடையாது"என கூறினார்.

# தஞ்சாவூர் அரசு ராஜா மிராசுதார் மருத்துவமனையில் ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளை பெற்றெடுத்த தாயாருக்கு சர்ப்ரைஸ்



தஞ்சை , மே.15-

தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட சீனிவாசபுரம் வடகரைப் பகுதியில் வசிக்கும் கார்த்திகேயன் திலகா தம்பதியினருக்கு திருமணம் நடந்து 6 ஆண்டுகள் கழித்து கடந்த மார்ச் மாதம் ஒரே பிரசவத்தில் 3 ஆண் குழந்தைகள் பிறந்தன. அன்னையர் தினத்தை முன்னிட்டு நேற்று தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண். இராமநாதன் 3 குழந்தைகளின் தாயான திலகாவிற்கு ஊட்டச்சத்துப் பையை அவரது வீட்டிற்கே சென்று கொடுத்து அன்னையர் தின வாழ்த்துக்களை தெரிவித்தார்.

சீனிவாசபுரம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பகால பரிசோதனைகளை திலகாவிற்கு மேற்கொண்ட போது மருத்துவ குழுவினரால் திலகாவுக்கு ஒரே சமயத்தில் 3 சிசுக்கள் கருத்தரிப்பதை உறுதி செய்தனர். இதனைத் தொடர்ந்து சீனிவாசபுரம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார செவிலியர் ஜனனி முறையான கர்ப்பகால பரிசோதனைகள் மற்றும் தொடர் கண்காணிப்பு திலகாவிற்கு செய்து வந்தார்.

இந்நிலையில் கடந்த மார்ச் மாதம் 22ஆம் தேதி அன்று ஒரு நிமிட இடைவெளியில் அடுத்தடுத்து திலகாவிற்கு 3 ஆண் குழந்தைகள் அரசு ராஜா மிராசுதார் மருத்துவமனையில் பிறந்தன. முதல் குழந்தை 1.5 கிலோ, இரண்டாவது குழந்தை 1.3 கிலோ, மூன்றாவது குழந்தை 1 கிலோ என்ற அளவில் பிறந்தன. இதனை அடுத்து செவிலியர் ஜனனி திலகாவிற்கு மகப்பேறு பின் கவனிப்பு காலத்தில் இல்லம் ரீதியான சிசு பராமரிப்பு மற்றும் கவனிப்பு திட்டத்தின் கீழ் சிசுவின் எடை அளவு, தாய்ப்பாலின் முக்கியத்துவம், தடுப்பூசி உள்ளிட்ட வற்றை முறையாக 1, 3, 7, 14, 21, 28 மற்றும் 42 ஆகிய நாட்களில் மேற்கொண்டதால் 3 குழந்தைகளின் எடை தற்போது 1.8 கிலோ, இரண்டாவது குழந்தை 1.7 கிலோவும் மூன்றாவது குழந்தை 1.4 கிலோவும் என்ற அளவில் எடை அதிகரித்து நலமுடன் இருக்கின்றனர்.

திலகாவின் கணவர் கார்த்திகேயன் ஒரு மாற்றுத்திறனாளி என்பதாலும் அவர்களின் குடும்பத்தின் ஏழ்மை நிலையை கருத்தில் கொண்டும் அவர்களுக்கு தேவையான வாழ்வாதார முன்னேற்ற உதவிகளை செய்து தருவதாக மேயர் சண். இராமநாதன் தெரிவித்ததோடு அர்ப்பணிப்புடன் சிறப்பாக பணியாற்றிய மருத்துவ குழுவினருக்கும் பாராட்டுகளை தெரிவித்தார். அன்னையர் தினத்தில் நடைபெற்ற இந்த நெகிழ்வான சந்திப்பை அறிந்த அந்தப் பகுதி பொதுமக்கள் மற்றும் திலகா உறவினர்கள் மேயருக்கு நன்றி தெரிவித்தனர்.

# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத், புதுக்கோட்டை மாவட்டம் சார்பாக மாணவர்களுக்கு கோடைகால நல்லொழுக்க பயிற்சி முகாம்





அறந்தாங்கி , மே.15-

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத், புதுக்கோட்டை மாவட்டம் சார்பாக மாணவர்களுக்கு கோடைகால நல்லொழுக்க பயிற்சி முகாம் நேற்று அம்மாபட்டினம் கிளை இசிஆர் மர்க்கஸில் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் மாவட்ட தலைவர் குலாம் பாட்ஷா தலைமை வகித்தார். மேலும் மாவட்ட செயலாளர் முகமது மீரான், மாவட்ட பொருளாளர் சித்திக் ரகுமான், துணைத் தலைவர் இலியாஸ், துணைச் செயலாளர்கள் ஷேக் அப்துல்லா, மீரா, புதுகை மீரான், மாவட்ட மாணவரணிச் செயலாளர் மைதீன், கிளை நிர்வாகிகள் முகமது யூசுப், சேக் தாவூத், ஃபைரோஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட பேச்சாளர்கள் சலீம், ரஹ்மத்துல்லாஹ், ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இதில் 104 மாணவர்கள், பல்வேறு ஊர்களிலிருந்து காலை 8 மணிக்கே வருகை பதிவு செய்து ஆர்வத்துடன் இந்த பயிற்சி முகாமில் கலந்து கொண்டுள்ளனர்.

# பிரதமர் மோடி எத்தனை பேரணி மேற்கொண்டாலும் வீண்தான்: காங்கிரஸ் ஜெய்ராம் ரமேஷ்



பெங்களூரு, மே.15-

பிரதமர் நரேந்திர மோடி எத்தனை பேரணி மேற்கொண்டாலும் வீண்தான் என காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனிப்பெரும் பான்மையுடன் 136 இடங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றது. ஆட்சி அமைப்பதற்கு 113 இடங்கள் தேவை. இதைத் தொடார்ந்து, ஆட்சி அமைக்கும் நடவடிக்கைகளில் காங்கிரஸ் ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில் கர்நாடக தேர்தல் குறித்து பேசிய ஜெய்ராம் ரமேஷ், பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அவரின் பிரசாரத்தைக் கண்டு மக்கள் சோர்வடைந்துள்ளனர். மோடி எத்தனை சாலைப்பேரணிகளை மேற்கொண்டாலும் அது வீண்தான். மக்களை அது உற்சாகமடையச் செய்யவில்லை. நமக்குத் தேவையானது எது என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர் எனக் குறிப்பிட்டார். கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கா நாடக சட்டப்பேரவைத் தோ தலில் 224 தொகுதிகளில் 136 இடங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் வாய்ப்பை காங்கிரஸ் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பா.ஜனதா கூட்டணியை அ.தி.மு.க. மறுபரிசிலனை செய்ய வேண்டும்- திருமாவளவன்



சென்னை, மே.15-

கர்நாடாகாவில் பா.ஜ.க. தோற்கடிக்கப்பட்டதன் மூலம் ஒட்டுமொத்த இந்தியாவிலும் பா.ஜ.க. முற்றிலும் துடைத்தெறியப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது என திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

விடுதலைசிறுத்தைகள் கட்சித் தலைவரான தொல்.திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, கர்நாடக மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வென்று ஆட்சியைக் கைப்பற்றி இருக்கிறது. பா.ஜ.க.வின் ஊழல் ஆட்சியையும், மதவெறி அரசியலையும் மரண அடி கொடுத்து வீழ்த்தியுள்ளனர். இந்தத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து தமிழர்கள் வாழும் பெங்களூரு பகுதிகளில் பத்து சட்டமன்றத் தொகுதிகளில் வி.சி.க. சார்பில் பிரசாரத்தை மேற்கொண்டோம். பிரசாரம் செய்யப்பட்ட 11 தொகுதிகளில் எட்டு தொகுதிகளை காங்கிரஸ் வென்றிருக்கிறது என்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

கர்நாடகாவில் பா.ஜ.க. தோற்கடிக்கப்பட்டதன் மூலம் ஒட்டுமொத்த இந்தியாவிலும் பா.ஜ.க. முற்றிலும் துடைத்தெறியப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில், தமிழ்நாட்டில் பா.ஜ.க.வை தூக்கிச் சுமந்து வரும் அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளும் இந்தத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில், பா.ஜ.க.வுடன் கொண்டுள்ள தங்களது கூட்டணி உறவை மறுபரிசீலனை செய்ய வேண்டியதேவை எழுந்து உள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.





புதுக்கோட்டையில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், காந்தி நகர் கிளை சார்பில் கோடைகால இலவச பயிற்சி (சிலம்பம், களரி) வகுப்புகள் தொடங்கப்பட்டது. பயிற்சி வகுப்பை இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் புதுக்கோட்டை மாவட்ட செயலாளர் குமாரவேல் துவக்கி வைத்தார். சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு அனைத்து பதிவுற்ற மருந்தாளுநர்கள் நல சங்கத்தின் மாநிலத் தலைவர் கார்த்திக் அவர்கள் கலந்து கொண்டார். காந்தி நகர் கிளை தலைவர் இதயம் முரளி தலைமை வகித்தார். மற்றும் இந்த நிகழ்வில் புதுக்கோட்டை நகர செயலாளர் தோழர் ஜெகன், நகர துணை தலைவர் நித்திஸ்குமார், நகர குழு உறுப்பினர் பாரதி, கிளை பொருளாளர் மணிமாறன், மற்றும் அன்புமணி, முகேஷ், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர், மற்றும் பாண்டியன் சிலம்பம் பாசறையின் பயிற்சியாளர் கார்த்திக் அவர்கள் பயிற்சி வழங்கினார்.



புதுக்கோட்டை அரசு முன் மாதிரி மேல்நிலைப் பள்ளியில் சமீப ஆண்டுகளாக மாணவர் சேர்க்கை குறைந்து கொண்டுவருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, மாணவர் சேர்க்கையை உயர்த்தவும் மற்றும் அரசு, பள்ளி மாணவர்களுக்கு வழங்கும் சலுகைகளைப் பற்றி பொதுமக்களுக்கு அறியச் செய்யும் நோக்கிலும் ஒரு பிரசார வாகனம் ஏற்பாடு செய்யப்பட்டு பிரசாரம் செய்யப்பட்டது. இந்த பிரசார வாகனம் நகரின் அனைத்து பகுதி களுக்கும் மற்றும் அருகில் உள்ள கிராமங்களும் சென்றுவந்தது. இதை ஏற்பாடு செய்த பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், அலுவலகப்பணியாளர்களை பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர்.



பட்டுக்கோட்டை மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நிறுவனம் பயிற்சித்துறையின் சார்பில் புதுக்கோட்டை ஒன்றிய அலுவலக கூட்டரங்கில் நீடித்த நிலையான இலக்குகள் குறித்து நடைபெற்ற பயிற்சிக்கு வட்டார வளர்ச்சி அலுவலர் எஸ். குமாரவேலன் தலைமை தாங்கினார். இந்த பயிற்சியானது புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 13 ஒன்றியங்களிலும் மாவட்ட வள மைய இயக்குநர் அறிவழகன் அறிவுறுத்தலின்படி நடைபெற்றது. இப்பயிற்சியில் ஐநா சபை வெளியிட்ட 17 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை உள்ளடக்கி ஒன்பது கருப்பொருளாக சுருக்கி இலக்கு மற்றும் குறிக்கோள்களை அடைய வறுமை இல்லாத வாழ்வாதாரம் நிறைந்த கிராமம் நலவாழ்வு கிராமம் குழந்தைகளின் நலன் கொண்ட கிராமம் உள்ளிட்ட 9 கருப்பொருள்களை கொண்ட தலைப்புகளில் நடைபெற்ற பயிற்சியில் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். பயிற்சியில் பயிற்றுநர்களாக சைவராசு சிவக்குமார் ராஜ்குமார் முத்துக்குமார் வீரமுத்து சேக்அப்துல்லா மகேந்திரன் வித்யா உள்ளிட்ட பயிற்றுநர்கள் கலந்துகொண்டு பயிற்சியளித்தனர்.



கர்நாடக சட்டமன்ற தேர்தல் அமோக வெற்றியை ஆதனக்கோட்டை மற்றும் பெருங்களூர் கடை வீதிகளில் காங்கிரஸ் கட்சியினர் வெடிவெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். இந்த நிகழ்ச்சியில் புதுக்கோட்டை ஒன்றிய காங்கிரஸ் தலைவர் ஜெய்சங்கர், மாநில பொதுக்குழு உறுப்பினர் கேளம். ராஜகோபால், முன்னாள் ஒன்றிய தலைவர் ராமமூர்த்தி பார்வதி தமிழ்வாணன், ராஜகோபால், ஐயர் முத்து, சுப்பிரமணி, நடராஜன், ராஜபகதுர் கருணாநிதி உள்ளிட்ட காங்கிரஸார் கலந்துகொண்டு அன்னை சோனியா காந்தி வாழ்க வருங்கால பாரத பிரதமர் ராகுல் காந்தி வாழ்க, அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மலலிகார்ஜுன கார்கே வாழ்க, தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி வாழ்க நாடாளுமன்ற உறுப்பினர் சு.திருநாவுக்கரசர் வாழ்க என முழக்கம் எழுப்பி கொண்டாடினர்.

# கறம்பக்குடியில் காணாமல் போன குளத்தை மீட்டு தர தமிழக அரசுக்கு கோரிக்கை





கறம்பக்குடி, மே.15-

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தென்னகரில் அமைந்துள்ள குளத்தை காணவில்லை என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் குற்றச்சாட்டு தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு குளத்தை மீட்டுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனா.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடியில் பேரூராட்சிக்கு சொந்தமான குளங்கள் மற்றும் நீர் வரத்து வாரிகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் கடந்த 2017-2018 ஆம் ஆண்டில் மதுரை உயர்நீதிமன்ற கிளை ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி உத்தரவு பிறப்பித்தது. அந்த உத்தரவினை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர், வட்டாட்சியர், பேரூராட்சி நிர்வாக அதிகாரியிடம் கொடுக்கப்பட்டது. அதிகாரிகள் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்று உத்தரவாதம் அளித்தனர். ஆனால் இன்று வரை அரசு அதிகாரிகள் ஆக்கிரமிப்புகளை அகற்றப்படுவதற்கான எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதனை கண்டித்து பலமுறை விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் மாபெரும் போராட்டங்கள் செய்யப் போவதாக அறிவித்திருந்த நிலையில் நான்கு முறை சமாதான கூட்டம் நடைபெற்றதாகவும் இந்த சமாதான கூட்டத்தில் பத்து நாட்களுக்குள் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். இன்று வரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை தற்பொழுது தென்னகரில் அமைந்துள்ள பறையன்குளம் முற்றிலுமாக காணாமல் போய் உள்ளதாகவும் தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு காணாமல் போன பறையன் குளம் மற்றும் நீர் வரத்து வாரிகளை கண்டுபிடித்து தருமாறு விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மதுரையில் ஆன்லைன் வர்த்தகத்தை எதிர்த்து விழிப்புணர்வு இரட்டை மாட்டு வண்டி பந்தயம்



மதுரை, மே.15-

வணிகர் நல சங்கம் பேரவை 40வது வணிகர் தினத்தை முன்னிட்டு ஆன்லைன் வர்த்தகத்தை எதிர்த்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நேற்று இரட்டை மாட்டு வண்டி பந்தயம் ஒத்தக்கடை பகுதியில் நடைபெற்றது. இப் போட்டியை வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி தொடங்கி வைத்தார். இதில் சிறிய மாடு, பெரிய மாடு என 20 ஜோடிகள் பங்கேற்றன இதில் ஒத்தக்கடையில் இருந்து சித்தாக்கூர், இளைங்கப்பட்டி எல்லையை தொடுவதற்கு மாட்டு வண்டிகள் சீறிப்பாய்ந்து சென்றன. இதில் பெரிய மாடு பந்தயத்தில் முதல் பரிசாக ராமநாதபுரம் மருங்கூர் அப்துல் காதர் முகமது, 40,001 ரூபாயும், சிறிய மாடு பந்தயத்தில் தேனி மாவட்டம் முதலாபுரம் சரவணவேல் முதல்பரிசு 30,001 ரூபாயும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மணிகண்டன் நலச் சங்கப் பேரவைபொதுச்செயலாளர் இஸ்மாயில், தலைவர் ரகுபதி, பொருளாளர் முனிஸ்வரன், யா, ஒத்தக்கடை ஊராட்சி மன்றத் தலைவர் முருகேஸ்வரி சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மத்திய புலனாய்வு அமைப்பான சிபிஐ-யின் இயக்குநராக பிரவின் சூட் நியமனம்



புதுடெல்லி, மே.15-

கர்நாடக டிஜிபியாக இருந்த பிரவீன் சூட், மத்திய புலனாய்வு அமைப்பான சிபிஐ-இன் இயக்குனராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். தற்போதைய சிபிஐ இயக்குனர் சுபோத் குமார் ஜெய்ஸ்வால் பணிக்காலம் மே 25 ஆம் தேதியுடன் நிறைவு பெறுகிறது.

இதைத் தொடர்ந்து பிரவீன் சூட் பதவியேற்க இருக்கிறார். முன்னதாக காங்கிரஸ் தலைவர்களுக்கு எதிராக வேண்டுமென்றே வழக்கு தொடர்ந்துவருவதாகவும், கர்நாடக மாநிலத்தில் பாஜக அரசாங்கத்தை பாதுகாக்கும் பணியில் பிரவீன் சூட் ஈடுபட்டு வருவதாகவும், அவரை கைது செய்ய வேண்டும் என்றும் அம்மாநில காங்கிரஸ்தலைவவர் டிகே சிவகுமார் குற்றம்சாட்டி இருந்தார். இந்தியாவில் சிபிஐ இயக்குனரை பிரதமர், தலைமை நீதிபதி, மக்களவை எதிர்கட்சி தலைவர் ஆகியோர் அடங்கிய குழு நியமனம் செய்து வருகிறது. சிபிஐ இயக்குனரின் பதவிக்காலம், இரண்டு ஆண்டுகள் ஆகும். இதனை அதிகபட்சம் ஐந்து ஆண்டுகள் வரை நீட்டித்துக்கொள்ளலாம்.

## வரும் நாடாளுமன்ற தேர்தலில்

# 40 தொகுதிகளிலும் திமுக வெற்றி பெற வேண்டும்: முதல்வர் மு.க.ஸ்டாலின்



சென்னை, மே.15-

வரும் நாடாளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளிலும் திமுக வெற்றி பெற வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தி உள்ளார். நாடாளுமன்றத்துக்கு அடுத்த ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதங்களில் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையொட்டி ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தேர்தலுக்கான ஆரம்ப கட்ட பணிகளை துவக்கிவிட்டனர்.

தி.மு.க.வை பொறுத்த வரை கட்சியை வலுப்படுத்த மேலும் 1 கோடி புதிய உறுப்பினர்களை சேர்க்கும் பணியை செய்து வருகிறது. இந்த நிலையில், திமுக மாவட்ட செயலாளர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் ஆலோசனை கூட்டம் திமுக தலைவரும், முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் காணொலி காட்சி மூலம் நடைபெற்றது. கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:- உழைக்காதவர்களுக்கு கட்சியில் இடமில்லை. மாவட்டச் செயலாளர்களின் செயல்பாடுகளை கண்காணித்து வருகிறேன். கட்சிப் பணிகளை பொறுப்போடு செய்ய வேண்டும், இல்லையென்றால் மாற்றப்படுவீர்கள்.

வரும் நாடாளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளிலும் திமுக வெற்றி பெற வேண்டும். பூத் கமிட்டி நிர்வாகிகள் தங்கள் பணிகளை துரிதப்படுத்த வேண்டும். பூத் வாரியாக கட்சியில் நியமிக்கப்பட்டு உள்ள ஒவ்வொரு நிர்வாகிகளுடனும் நீங்கள் தொடர்பு கொண்டுபேசவேண்டும். தி.மு.க. அரசு செய்துள்ள சாதனைகளை, திட்டங்களை மக்கள் மத்தியில் எடுத்துசொல்ல வேண்டும். வெற்றியே நமது குறிக்கோள் என்ற எண்ணத்தில் ஒவ்வொருவரும் பணியாற்ற வேண்டும்.

நாடாளுமன்ற தேர்தல் பணிகளை வேகப்படுத்த வார்டு வாரியாக கூட்டங்களையும் நடத்த வேண்டும். வாக்குச்சாவடி குழுக்களுக்கான பணிகளை விரைவாக மேற்கொள்ளவேண்டும். அமைச்சர்கள், சட்டமன்றஉறுப்பினர்கள் கட்சியினரின் நலன் சார்ந்தும் செயலாற்ற வேண்டும். சுணக்கமாக செயல்படும் மாவட்டச் செயலாளர்கள் தங்கள் பணிகளை வேகப்படுத்த வேண்டும். கருணாநிதி நூற்றாண்டு விழா ஏற்பாடுகளை வெகு சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# கள்ளசாராயம் குடித்த 4 பேர் பலி
# 4 காவலர்கள் பணியிடை நீக்கம்

# ஐபிஎல் டிக்கெட் கள்ள சந்தையில் மீண்டும் விற்பனை 9 பேர் கைது





# கர்நாடக முதல்வர் யார்?
## காங். எம்எல்ஏக்கள் கூட்டத்தில் தீர்மானம்


சென்னை / புதுக்கோட்டை | 15.05.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

15.05.2023 திங்கள்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

தேபேந்திரநாத் தாகூர் , இந்திய மெய்யியலாளர், நூலாசிரியர் (பி.1817) (இ.1905)



சுக்தேவ் தபார் , இந்திய விடுதலைப் போராளி (பி.1907) (இ.1931)



சு. ம. மாணிக்கராஜா , இலங்கை அரசியல்வாதி (பி.1908)



திருச்சி சிவா , இந்திய அரசியல்வாதி (பி.1958)



## இன்றைய நினைவு நாள்

காசிவாசி செந்திநாதையர் , ஈழத்துத் தமிழறிஞர் (பி.1848) (இ.1924)



பைரோன் சிங் செகாவத் , இந்தியாவின் 11வது குடியரசுத் துணைத்தலைவர் (பி.1923) (இ.2010)



## பன்னாட்டுக் குடும்ப நாள்